**கண்டி கடவத் சதர கங்கவட்ட கோரளை பிரதேச சபை - 2024**

---

## 1.1 பாதகமான அபிப்பிராயம்

கண்டி கடவத் சதர கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான முக்கியத்துவம் காரணமாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கண்டி கடவத் சதர கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயம் வெளியிடப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது

குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்க மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக் கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்களை எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையால் நடத்திச் செல்லப்படுகின்ற சுவிடிஸ் வங்கி கணக்கில் மீளாய்வாண்டிற்குரிய மொத்தம் ரூபா 3,145,307 ஆன வட்டி வருமானம் கணக்கீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டில் சீராக்கம் செய்வதாக. | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய மொத்தம் ரூபா 38,667,344 ஆன நிலையான வைப்புகள் வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | - மேற்படி - | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய 02 வருமான விடயங்களில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 23,750,784 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | நாட்குறிப்பு பதிவொன்றின் மூலம் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறைந்த வருமானம் பெறுவோர் குடும்பங்களில் வலது குறைந்த நபர்களுக்காக போசணை பொதி ஒன்று வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய ரூபா 460,000 தொகை கடன் கொடுத்தோர்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கையில் அவ் விடயத்திற்கு உரியதாக ரூபா 437,500 தொகை மீண்டும் கடன் கொடுத்தோராக்கப்பட்டிருந்தது அதன் காரணமாக அப் | கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள கடன் கொடுத்தோரை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கடன் கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானத்தினால் கடன் கொடுத்தோர் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | முன்னைய ஆண்டில் உடன்படிக்கை செய்யப்பட்ட கடன் கொடுத்தோ ராக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 32,475,000 ஆன 30 செயற்திட்டங்கள் நிர்மாணிக்கப்படாமல் கைவிடப் பட்டிருக்கையில் தொடர்ந்தும் கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப் பட்டிருந்தது. | குறித்த 30 செயற் திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுப்பதாக. | கடன் கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | முன்னைய ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த மீளாய்வாண்டின் போது தீர்வு செய்யப்பட்டிருந்த மொத்தம் 1,774,997 ஆன 50 நானாவித செலவுகள் விடயங்கள் தவறுதலாக மீனாய்வாண்டின் போது கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய 50 செயற் திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து சீராக்கம் செய்வதாக. | கடன் கொடுத்த தொடர்பாக சரியான கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தம் ரூபா 290,810 ஆன தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் மேலும் 09 உபகரணங்களின் பெறுமதி இனங் காணப்பட்டிருக்கவில்லை. | தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | களஞ்சிய பேரேட்டின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் போது ரூபாய் 107,700 இற்கு கொள்வனவு செய்யப் பட்டிருந்த மின் உபகரணங்கள் கணக்கு செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டில் சீராக்கம் செய்வதாக. | இருப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும. |
| (ஐ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 காணப்பட்ட மொத்தம் 558,968,801 ஆன நிலையான வைப்புக்கள் ரூபா 508,968,801 என ரூபா 50,000,000 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் வரும் ஆண்டில் சீராக்கும் செய்வதாக. | நிலையான வைப்புக்களின் பெறுமதியை சரியாக கணக்கீடு செய்து நிதி கூற்றுகளில் காண்பிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதி கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட 06 சொத்து | அந்த இணக்கமின்மை தொடர்பாக ஆராய்ந்து உரிய சீராக்கங்களை சரி | கணக்கு மீதிகளுக்குரிய அட்டவணைகளுடன் |

| | | | |
|---|---|---|---|
| | விடயங்களுக்குரிய மீதிகள் அதற்குரிய அட்டவணைகள் மற்றும் பதிவேடுடன் ஒப்பிடும் போது ரூபா 354,484 ஆன இணக்கமின்மை ஒன்று இருந்தது. | செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | ஒப்பிட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீத வரி வருமான கணக்கின் பிரகாரம் ரூபா 16,745,324 ஆன பெறவேண்டிய மீதி ஒன்று காணப்பட்ட போதும் கணனி முறைமை மென்பொருளின் பிரகாரம் பெற வேண்டிய பெறவேண்டிய வீத வரி மீதி ரூபா 16,056,539 ஆக இருந்ததால் ரூபா 688,785 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வேறுபாடுகளுக்கான காரணமாக இருந்த விடயங்கள் ஆராயப்பட்டு அறிக்கையிடுவதாக. | இணக்கமின்மை களை கண்டுபிடித்து கணக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 8,500,000 பெறுமதியான போட்டோன் மோட்டார் லொரி நிதிக் கூற்றுக்களில் ரூபா 6,009,602 என காண்பிக்கப்பட்டமையால் ரூபா 2,490,398 வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாட்டை அடுத்த ஆண்டில் சீராக்கம் செய்வதாக. | இணக்கமின்மை பரீட்சித்து பார்த்து கணக்குகள் சீராக்கம் செய்யப் பட வேண்டும். |
| (ஈ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் 04 சொத்துக்களின் மீது ரூபா 24,065,411 ஆக இருந்த போதும் கணக்கில் அதற்குரிய அட்டவணையில் அது ரூபா 18,299,921 என பதிவு செய்யப்பட்டதால் ரூபா 5,765,490 ஆன இணக்கமின்மை இருந்தது காணப்பட்டது | இணக்கமிண்மை பரீட்சித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | இணக்கமின்மை பரீட்சித்துப் பார்த்து கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் நகர அபிவிருத்தி அதிகார சபை முதலீட்டு கணக்கின் மீதி ரூபா .12,883,577 ஆக இருந்த போதும் நகர அபிவிருத்தி அதிகார சபை வைப்புக் கணக்கின் மீதி ரூபா 18,276,558 என காண்பிக்கப் பட்டமையால் ரூபா 5,392,981 ஆன வேறுபாடு காணப்பட்டது. | இவ்வேறுபாடு வருடக் கணக்காக இருந்து வருவதால் ஆராய்ந்து பார்த்து அதற்கு இடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | -மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டில் இறுதி திகதி எது காசேட்டின் பிரகாரம் வங்கி மீதி ரூபா 175,358,208 ஆக இருந்த போதும் நிதி கூற்றுக்களில் அது ரூபா .190,028,118 என காண்பிக்கப் பட்டமையால் ரூபா 14,669,910 ஆன இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | வேறுபாட்டை கண்டுபிடித்து கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா. 8,865,860 கூட்டுத்தொகையான 03 சொத்து விடயங்களுக்குரிய பதிவேடுகள், மற்றும் அட்டவணைகள் என்பன சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | குறித்த மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய பதிவேடுகள் மற்றும் கோவைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்ளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்**<br>28 ஆம் பிரிவு | பிரதேச சபையால் பயன்படுத்தப்படுகின்ற 17 காணிகளின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு சொந்தமான காணிகளின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை வேண்டும். |
| (ஆ) | **1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்**<br>218 ஆம் விதி | சபையால் 2019 ஆம் ஆண்டின் பின்னர் சொத்துக்கள் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | வருடாந்தம் சொத்துக்கள் கணிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | **2020 செப்டம்பர் 28 ஆந் திகதிய 2020/06 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை** | சபையின் மிகை பணத்தை சபைக்கு வருமானம் உழைக்கக்கூடிய முறையில் செயற் திட்டங்களில் சபை ஆதனங்களை அபிவிருத்தி செய்யும் செயற் திட்டங்கள் அல்லது பெரும்பாலான மக்களுக்கு பொது வசதிகளை வழங்கும் செயற்திட்டங்களில் முதலீடு செய்து சபை பிரதேசத்தின் பொதுமக்களுக்கு சேவை செய்வதற்கும் சபையின் வருமானத்தை | இனம் காணப்பட்ட சுமார் 250 அத்தியாவசிய திட்டங்களை செயல்படுத்துவதற்கு பிராந்திய ஒருங்கிணைப்புக் குழு அங்கீகாரம் பெற்றுள்ளதாகவும் இந்தத் திட்டங்கள் நிலையான வைப்புத்தொகை மூலம் செயல்படுத்தப்படும் | மிகை பணத்தை பகுதியின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தி சிறந்த தரமான சேவைகளை வழங்க வேண்டும். |

| | |
|---|---|
| அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமல் ரூபா 558,968,801 ஆன மிகைப் பணத்தை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | என்று எதிர்பார்க்கப் படுவதாகவும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 174,229,357 ஆக இருந்ததுடன் அதனேடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 133,729,043 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i). வீதவரியும் வரியும் | 30,996,226 | 29,520,892 | 28,832,304 | 16,760,607 | 27,205,760 | 27,565,562 | 29,246,636 | 16,072,019 |
| (ii). வாடகை | 16,985,932 | 14,141,298 | 14,141,298 | 176,082 | 2,022,332 | 3,676,872 | 3,500,790 | 176,082 |
| (iii). அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 8,512,000 | 15,605,103 | 15,631,704 | 386,635 | 3,048,050 | 10,188,189 | 9,833,202 | 413,236 |
| (iv). ஏனைய வருமானம் | 168,700,000 | 172,287,211 | 225,097,434 | 158,189,234 | 159,077,400 | 168,643,362 | 99,425,240 | 210,999,458 |
| மொத்தம் | 225,194,158 | 231,554,504 | 283,702,740 | 175,512,558 | 191,353,542 | 210,073,985 | 142,005,868 | 227,660,795 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா. 16,760,607 ஆன நிலுவை வீதவரி மீதியொன்றாக காணப்பட்டது. அதில் ஒரு அலகில் பற்றாக்குறை ரூபா. 50,000 இற்கு மேற்பட்ட 03 அலகுகளிலிருந்து ரூபா 319,923 தொகையும் ரூபா 25,000 - ரூபா 50,000 இற்கு இடைப்பட்ட 09 அலகுகளில் ரூபா 277,725 தொகையும் ரூபா 10,000 - 25,000 இற்கு இடைப்பட்ட 198 அலகுகளில் இருந்து ரூபா 2,769,762 தொகை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு சம்பந்தப்பட்ட ஆதன உரிமையாளர்களுக்கு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் நீதிமன்ற தண்டப் பணமாக ரூபா 625,000 மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 148,093,459 ஆன தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | கருத்து தெரிவிக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 2.3 மிகை அறவீடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டில் ரூபா 262,608 ஆன மிகை அறவீடு விதிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு 175,068 ஆன தொகை ஒன்று மேலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 04 தரப்பினர்களுக்கு மிகை அறவீட்டினை செலுத்தியுள்ளனர், மேலும் ஏனைய பங்குதாரர்கள் எழுத்து மூலமாக பணத்தை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக. | நிலுவை மிகை அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 93 முதல் 95 ஆம் வரையான பிரிவுகளின் பிரகாரம் மலப் போக்குவரத்து மற்றும் கழிவுப் பொருட்களை கொண்டு செல்வதற்காக கலி வண்டி சேவையொன்றை ஆரம்பிப்பதற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | .மலக் கழிவுப் போக்கு வரத்துக்காக கலி லொரி வண்டியொன்றை வழங்குவதற்கும் மலக் கழிவுப் சுத்திகரிப்பு அலகினை தொடங்கு வதற்கும் சபையிடம் பொருத்தமான காணி என்பதாகவும் இதற்குத் தேவையான தொழில்நுட்பம் மற்றும் தொழிலாளர்கள் தேவைப்படுவதாலும், பாரிய அளவில் நிறைவேற்ற செயற்திட்டம் ஒன்றாக இருப்பதால் அதனைச் செயல்படுத்த இயலுமை என்பதாக. | அதிகார பிரதேசத்தில் உள்ள மக்களின் சேவைகளுக்காகச் செய்யப்பட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய 04 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 24,920,715 ஆக இருந்தது. அதில் 01 ஆண்டிற்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 19,073,822 தொகையும் ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மொத்தம் ரூபா 1,135,156 தொகை .அறவிடப்பட்டிருக்க வில்லை. | அறவிடக்கூடிய மீதிகளை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பெற வேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 145 ஒழுங்கைகள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24(2) பிரிவின் பிரகாரம் 1996 யூலை 05 ஆந் திகதிய 931 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த போதும் அந்த ஒழுங்கைகள் தொடர்பாக எதிர்ப்புக்களை கருத்திற் கொண்டு மீண்டும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் வீதிகளை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | வீதிகளை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 7,887,162 கூட்டுத்தொகையான கம்பக்டர் டேலர், நீர் உபகரண இருப்பொன்றும் மற்றம் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத டேலரொன்று 07 ஆண்டுகள் காலம் முதல் விளைவற்று அல்லது குறை பயன்பாடுடன் காணப்பட்டது. | உரித்தினைக் கையேற்று ஏல விற்பனை செய்வதற்கு அல்லது திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான குருதெனிய புறநெகும கட்டிடத்தில் இரண்டாம் மாடியில் 526 சதுர அடி அளவில் மீளாய்வாண்டின் ஜுன் 30 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | மதிப்பீட்டு அறிக்கையினை பெற்றுத்தருமாறு விலைமதிப்பீட்டு திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டில் பகுதிகளாக ஆக்கப்பட்ட விற்பனை செய்யப்பட்டிருந்த பொது நடவடிக்கைகளுக்காக சபைக்கு வழங்கப்பட்டிருந்த 06 காணி பகுதிகள் பெற்றுக் கொள்ளப்பட்ட உரித்து உறுதி மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய உறுதிகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | உரித்து உறுதிகளை பெற்றுக் கொண்டு சொத்துக்களின் உரித்தை உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | சபை பயன் படுத்தும் 04 காணி துண்டுகளில் உரித்தினை கையேற்கப்பட்டு இருக்கவில்லை. | உரித்தை கையேற்பது தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக. | ்துக்களின் உரித்து யற்கப்பட வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வுபெற்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற 28 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா. 1,330,712 தொகையான ஊழியர் ் கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | ஊழியர் கடன் மீதிகள அறவிடப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மீளாய்வாண்டிற்குரிய 10 நிலையான அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்ப்பபட்டிருந்த போதும் ஆண்டின் போது அதில் 09 செயற்திட்டங்கள் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் நற்காக நிலைபேறான அபிவிருத்தி செயற்திட்டங்களை மேற்கொள்வதாக. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். |